# பஞ்ச ஸம்ஸ்காரம்

ஸ்ரீவைஷ்ணவஸிம்ஹம் ரஹஸ்யார்த்த விவரணப்ரவீணர்
வித்வான் நியாய சிரோமணி சொல்வேந்தர்
ஸ்ரீமான் உ.வே. பிள்ளைலோகம் ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி

ஜன்மங்களில் சிறந்தது மனுஷ்ய ஜன்மம். மனுஷ்ய ஜன்மத்திலும் ஸ்ரீவைஷ்ணவனாகப் பிறப்பது பெரும் பாக்யம். அவ்வாறு பிறந்து பகவத்விஷய ஞானம் பெற்றுத் தெளிந்து பாகவதர்களாகிய அவனடியார்களிடத்தில் ஆராக் காதல் கொண்டு அடிமை செய்துப்போந்து அநுஷ்டான சீலர்களாக விளங்குவதைப் போன்ற சீரிய வாழ்க்கை வேறொன்றுமில்லை.

பாகவதோத்தமர்கள் என்று புகழப்படுகிறவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள். ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் பலநூல்களில் பலவகையாகக் கூறப்பட்டுள்ளது.

> யே கண்டலக்ந துளஸீ நளிநாக்ஷமாலா:
> யே பாஹுமூல பரிசிஹ்நித சங்கசக்ரா: ।
> யே வா லலாடபலகே, லஸதூர்த்வபுண்ட்ரா:
> தே வைஷ்ணவா: ஸத்தமாசு பவித்யந்தி ।।

கழுத்தில் திருத்துழாய் மாலை தாமரைமணி மாலைகளை அணிந்து, புஜங்களில் சங்குசக்கரப்பொறிகளையும், நெற்றியில் திருமண்காப்பினையும் அணியப் பெற்றவர்களே ஸ்ரீவைஷ்ணவர்கள் என்று ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தை இந்த ச்லோகம் ஒருவாறு உணர்த்துகிறது.

பகவத் விஷயகமான ஞானத்தைப் பெறவேண்டுமாயின் ஸதாசார்ய ஸம்பந்தம் பெறவேண்டும். பெரிய திருமந்திரத்தை உபதேசிப்பவரே ஆசாரியர். எல்லோருக்கும் ஸதாசார்ய ஸம்பந்தம் எளிதில் கிடைத்துவிடாது. ஆசார்ய ஸம்பந்தமின்றி பகவானை அடைய வழியில்லை. பகவத் க்ருபையினால்தான் ஸதாசாரியனைப் பெற முடியும். பகவல்லாபம் ஆசார்யனாலே: ஆசார்யலாபம் பகவானாலே.

பகவானும் ஞானோபதேசத்தைச் செய்ய விரும்பினால் ஆசாரியனாக மாற வேண்டும். ஸ்ரீபார்த்தஸாரதியான எம்பெருமான் அர்ஜுனனின் அஜ்ஞானத்தையும் கலக்கத்தையும் நீக்க எண்ணினான். கீதாசாரியனாக மாறி கீதோபதேசத்தைச் செய்தான். ஈசுவரனும் ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டிருப்பன் என்று நம் பெரியோர்கள் கூறுவர்.

ஏதங்களாயின வெல்லாம் இறங்கலிடுவித்து என்னுள்ளே
பீதகவாடைப்பிரானார், பிரமகுருவாகிவந்து
போதிற்கமல வன்னெஞ்சம் புகுந்துமென் சென்னித்திடரில்
பாத விலச்சினை வைத்தார், பண்டன்று பட்டினங்காப்பே.

என்ற பாசுரத்தினால் பகவானும் ஆசாரியனாக எழுந்தருளி உபதேசத்தைச் செய்து இதயத்தில் இருந்த அஜ்ஞானத்தை நீக்கினார் என்கிறார் பெரியாழ்வார்.

புறவிருளை நீக்குகிறவன் பகலவன்; அகவிருமை நீக்குகிறவர் ஆசாரியர். அகவிருள் என்பது அஜ்ஞானம். தேஹாத்மாபிமானம், ஸ்வாதந்த்ரிய புத்தி, அந்ய சேஷத்வபுத்தி ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் முதலியவற்றையே 'போதில் கமல வன் னெஞ்சத்து ஏதங்கள்' என்றார் ஆழ்வார். இத்தகைய அகவிருளை நீக்குகிறவர் ஆசாரியர்.

கல்லைத்துளைத்து அதில் நீரை நிறுத்துவாரைப் போலே நிர்விவரமான தன்னெஞ்சில் ஸகல வேத ரஹஸ்யார்த்தமாகிற ததீய சேஷத்வ பர்யந்தமான பகவத் சேஷத்வத்தை நம்மாழ்வார் நிலைநிறுத்தியதை, 'வேதத்தினுட்பொருளை என்னெஞ்சுள் நிறுத்தினாள்' என்று மதுரகவிகள் கொண்டாடுகிறார்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை நிலை நிறுத்திப் பரிஷ்கரித்தவர் எம்பெருமானார். அவருக்குப் பிற்பட்ட ஆசாரியர்கள் தத்தம் சிஷ்யர்களுக்கு அந்திமோபதேசமாகச் செய்து வந்து இருக்கின்றனர். 'எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்றிரும்' என்பதே அவ்வுபதேசம். ஸ்ரீ ஆழ்வானும், ஆண்டாளும், எம்பெருமானாரின் திருவடி ஸம்பந்தத்தை கிடைத்தற்கரிய மாநிதியாகவே எண்ணிப் போற்றிப்புகழ்ந்துள்ளனர். விசத வாக் சிகாமணியான நம் மணவாள மாமுனிகளும், ஞானாநுஷ்டானங்கள் நிரம்பிய ஸதாசார்ய ஸம்பந்தத்தைப் பெறவேணும் என்று அழகிய முறையில் குறிப்பாக எடுத்துக் காட்டுகிறார். ஆதலால் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நல்லாசிரியனை ஆச்ரயித்து நிறம் பெறவேண்டும் என்பதாயிற்று.

திருமங்கையாழ்வாரும் திருநறையூர் நம்பியிடத்தில் ஸமாச்ரயணத்தையும், திருக்கண்ணபுரத்து எம்பெருமானிடம் திருமந்த்ரார்த்தத்தையும் பெற்றார் என்று ஸம்பிரதாய வல்லுநர் கூறுவர்.

'திருவேங்கடமுடையாய்! என்னையும் என்னுடைமையையும் உன் சக்கரப் பொறியொற்றிக் கொண்டு நின்னருளே புரிந்திருந்தேன்' என்கிறார், பெரியாழ்வார். பஞ்சா சார்ய பதாச்ரிதர் எனப்போற்றப்படுகிற நம் இராமாநுஜர் பெரிய நம்பியிடத்தில் திருவிலச்சினை பெற்றுத் திகழ்ந்தார். பயன்னறாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்பவர் ஆசாரியர். எங்கேயோ உண்டாகும் நறுமலரும் பகவானுக்காக மாலை தொடுப்போரின் கையில் தன்னடையாகவே வந்து சேர்ந்து பகவானை அடைகிறது. பகவானும் அதனைத் தோளிணை மேலும் தன் தாளிணைமீதும் சுடர் முடியிலும் சாற்றிக் கொண்டு மகிழ்கிறான்.

ஆசாரியர், பஞ்சஸம்ஸ்காரங்களினால் தன்னை ஆச்ரயித்த ஸ்ரீ வைஷ்ணவரை பகவத் ப்ராப்தி அநுகூலராக மாற்றி மகிழ்கிறார்.

தாப: புண்ட்ரஸ்ததாநாம மந்த்ரோ யாகஶ்ச பஞ்சம:

என்று பஞ்ச ஸம்ஸ்காரத்தைக் கூறுகிறார்கள். பஞ்ச ஸம்ஸ்காரத்தில் முதலாவது திருவிலச்சினை பெறுதல். ஆசார்யர் பரமாநுக்ரஹத்தோடு தன் திருக்கையால் சங்க சக்ர லாஞ்சனத்தை ப்ரஸாதிக்க, அதைப் பெற்ற பிறகே ஒருவன் ஆசார்ய உபதேசத்தைப் பெறத் தகுதியுடையவனாக ஆகிறான். அப்போதுதான் அவனுக்கு உண்மையான ஸ்ரீவைஷ்ணவத்வம் ஸித்திக்கிறது.

இதனைப் பெறாதவர்கள் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் எவரும் இருக்க மாட்டார்கள். ஞானத்திற்கும் அநுஷ்டானத்திற்கும் கௌரவம் குறைந்துவரும் இக்காலத்திலும் பஞ்சஸம்ஸ்காரம் (ஸமா ச்ரயணம்) செய்து கொள்ளும் முறை அடியோடு மறைந்துவிடவில்லை; ஆனால் அருகி வருவதை மறுப்பதற்கில்லை. ஆசாரியர்கள், இதன் அவசியத்தை (ஸமாச்ரயணம் செய்து கொள்ளும் அவசியத்தை) அனைவருக்கும் உணர்த்துவது மிகவும் இன்றியமையாததொன்று.

அடுத்தது புண்ட்ரம். ஆசாரியர் தம் திருக்கையால் சிஷ்யருக்குக் கேசவாதி த்வாதச ஊர்த்வ புண்ட்ரங்களை அணிவிக்கிறார். அது முதல் அவர் என்றென்றும் பன்னிரு திருமண்காப்போடு விளங்கவேண்டும் என்பதையே இது குறிக்கிறது. இது ஸ்ரீவைஷ்ணவரின் இரண்டாவது லக்ஷணம்.

மூன்றாவது நாமகரணம். 'கோவிந்த சர்மா, கோபால சர்மா' என்று ஒவ்வொருவரும் இயற்பெயரைப் பெற்றிருந்தாலும், அப்பெயர்கள் ஒருவாறு ஸ்வாதந்த்ரயத்தையே உணர்த்துவதாக அமைந்திருக்கின்றன போலும்! ஆதலால் ஆசாரியர்கள் தத்தம் திருமாளிகையில் தொன்றுதொட்டு வரும் வழக்கத்தைப் பின்பற்றி ராமாநுஜதாஸன். ஸ்ரீவைஷ்ணவ தாஸன், மதுரவிதாஸன், என்ற பொதுப்பெயர்களை, தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு இடுகிறார்கள். ஆசாரியன், தாஸனுக்குப் பாரதந்த்ரியத்தை உணர்த்துவதற்காக வைக்கும் பெயர் இதுதான்.

நான்காவது : மந்த்ரம், திருமந்திர உபதேசம். 'குலம் தரும் செல்வம் தந்திடும்' என்கிறபடியே நலம் பல நல்கும் நற்சொல்லாகிய திருமந்திரத்தை அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தை (த்வயம் சரம சுலோகங்கள் உள்பட ரஹஸ்ய த்ரயத்தை) உபதேசித்தல். குரு பரம்பரை சொல்ல வைத்தல். சிஷ்யன் இவ்வுபதேசத்தைப் பெற்று இதை உபசரித்த ஆசாரியனிடத்திலும், மந்திரத்திற்கு உள்ளீடான அர்த்தங்களிலும் நன்னம்பிக்கை கொண்டு ப்ரதி பத்தியோடு நடந்து கொள்ள வேண்டும்.

ஐந்தாவது : யாகம். பகவதாராதனம். திருமந்திரத்தையும் மற்ற உபதேசங்களையும் பெற்ற பிறகே சிஷ்யன் பகவானுக்குத் திருவாராதனம் செய்யும் தகுதியைப் பெறுகிறான். இத்தகைய தகுதிகளைப் பெற்றவர் அதுமுதல் திருவாராதனம் முதலிய கைங்கர்யங்களையும் கிரந்த காலக்ஷேபாதிகளையும் செய்து கொண்டு ஆத்மோஜ்ஜீவநோபாயத்தையும் நாடி நிற்கிறார். நாளடைவில் 'கண்ணபுரம் ஒன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ' என்றபடி

எம்பெருமானின் திருவடிகளில் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து கொண்டு கைங்கர்ய ரஸாநுபவத்தை அநுபவித்துக் கொண்டு ப்ரபன்னராக விளங்குகிறார்.

இத்தகைய பஞ்சஸம்ஸ்காரத்தைச் செய்து கொண்டு உய்ய வேண்டும் என்று நினைப்பதே நல்வாழ்வைப் பெறும் வழியாகும். ஸ்ரீவைஷ்ணவர்கள் இவ்வாறு முறையறிந்து பகவத் பாகவத ஆசார்ய பக்தியோடு வாழ்வதற்காகவே இந்த நல்ல வழிகாட்டப்படுகிறது. எம்பெருமானார் எழுபத்துநான்கு ஸிம்மாஸநாதிபதிகளையும், ஸ்ரீமணவாளமாமுனிகள் அஷ்டதிக்கஜாசாரியர் களையும் நியமித்தற்கு இதுவே முக்கிய காரணம் என்னலாம்.

ஆதலால் ஒவ்வொருவரும் ஸதாசாரியரை ஆச்ரயித்து பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொண்டு விளங்குவதே பூர்வாசாரியர்களுக்கு உவப்பு: எம்பெருமானுக்கு இனிதுவப்பு. ஆசார்யாபிமானமே உத்தாரகம்.